

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், 2025–26 ஆம் ஆண்டிற்கான சிறந்த மாவட்ட வன அலுவலர்கள் விருதுகளை நீலகிரி வனப்பிரிவு மாவட்ட வன அலுவலர் எஸ்.கௌதம், கூடலூர் வனப்பிரிவு மாவட்ட வன அலுவலர் என். வெங்கடேஷ் பிரபு, புதுக்கோட்டை வனப்பிரிவு மாவட்ட வன அலுவலர் எஸ். கணேசலிங்கம், சிறப்பு அலுவலர் விஸ்மிஜு விஸ்வநாதன், ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனுள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், ”சென்னையின் நூறு ஆண்டுகள் பழமையான மரங்கள் – ஒரு உயிர்த்தெழும் பாரம்பரியம் என்ற சிறப்பு நூலை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனுள்ளனர்.

## மெரினாவில் “கற்றனைத் தூறும் அறிவுச் சிலை”!

# தமிழர்கள் கல்வியை இறுகப்பற்றினால் போதும்; ஒருபோதும் நாம் வீழ மாட்டோம்! வெல்வோம் ஒன்றாக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, மார்ச் 11–

கல்வியின் பெருமையைச் சொல்லும் “கற்றனைத் தூறும் அறிவுச் சிலையை திறந்து வைத்ததையடுத்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**தமிழ்நாட்டின் அடையாளங்களைச் சொல்லும் மெரினாவில் கல்வியின் பெருமையைச் சொல்லும் “கற்றனைத் தூறும் அறிவுச் சிலை”!**

**குழந்தைகள் மாணவர்கள் இளைஞர்கள் சுற்றுலாப் பயணிகள் கூடும் தமிழர் கடற்கரையான மெரினா நெடுக, உழைப்பாளர் சிலை விடுதலை வீரர்கள் சிலைகள் தமிழ் வளர்த்த ஆன்றோர் சிலைகள் உள்ளிட்ட சிலைகளுடன், தமிழ்நாட்டின் கல்விப் பெருமையைச் சொல்லும், “கற்றனைத் தூறும் அறிவுச் சிலை”யைத் திறந்து வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**தமிழர்கள் கல்வியை இறுகப்பற்றிக் கொண்டால் போதும், ஒருபோதும் நாம் வீழ மாட்டோம்! வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



## ரூ.62.68 கோடி செலவில்

# மதுரை சுப்பிரமணியபுரம் திட்டப் பகுதியில் 396 அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 11 –**

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மதுரையில் சுப்பிரமணியபுரம் திட்டப்பகுதியில் ரூ.62.68 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 396 அடுக்கு மாடி குடியிருப்புகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.3.2026) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மதுரையில் சுப்பிரமணியபுரம் திட்டப் பகுதியில் 62.68 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 396 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது, அவர்களுக்கு குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தல்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ், மதுரையில் சுப்பிரமணியபுரம் திட்டப்பகுதியில் 62.68 கோடி ரூபாய் செலவில் 414 சதுர அடியில் தூண் மற்றும் 9 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள 396 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 414 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிவறை மற்றும் தெரு விளக்கு ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர்வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், பயனாளிகளால் குடியிருப்பு நலச் சங்கம் அமைக்கப்பட்டு குடியிருப்புகளை நல்ல முறை பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளன. மதுரை மாநகராட்சிக்குட்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் பொருளாதாரத்தில்நலிவுற்றகுடும்பங்களுக்கு இக்குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் இந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 210 திட்டப் பகுதிகளில் 74,522 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிச் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் தலைமைப் பொறியாளர் திரு. வி.எஸ். கிருஷ்ணசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பதிவுத்துறை சார்பில்

# ரூ.14.92 கோடியில் 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்!





*சென்னை, மார்ச் 11-*

*பதிவுத்துறை சார்பில் ரூ.14.92 கோடி செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.03.2026) தலைமைச் செயலகத்தில், பதிவுத்துறை சார்பில் 14 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக கட்டப்பட்டுள்ள 7 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் தருமபுரி பதிவு மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.*

*பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களை பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.*

*7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்*

*வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க,*

*கோ யம்புத்தூர் மாவட்டம் - கிணத்துக்கடவு மற்றும் சூலூர், தூத்துக்குடி மாவட்டம் - ஏரல், விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர், திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி, திருப்பத்தூர் மாவட்டம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் என மொத்தம் 14 கோடியே*

*92 இலட்சம் ரூபாய் செலவில் பதிவுத்துறைக்கு கட்டப்பட்டுள்ள 7 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.*

*சர்க்கார்சாமக்குளம் மற்றும் பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 சார்பதிவாளர் அலுவலகங்களை திறந்து வைத்தல்*

*2025-2026-ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பை தொடர்ந்து கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டம், பெரியநாயக்கன் பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 14 கிராமங்களில் 6 கிராமங்களை பிரித்து அந்த 6 கிராமங்களை உள்ளடக்கி கோயம்புத்தூர் (வடக்கு) பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட சர்க்கார்சாமக்குளம் சார்பதிவாளர் அலுவலகம்;*

*தருமபுரி பதிவு மாவட்டம், பாலக்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 12 கிராமங்கள், பென்னாகரம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2 கிராமங்கள், தருமபுரி (மேற்கு) சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 5 கிராமங்கள் மற்றும் தருமபுரி 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 3 கிராமங்கள் பிரித்து மொத்தம் 22 கிராமங்களை உள்ளடக்கி தருமபுரி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பாப்பாரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.*

*புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுவதன் மூலம் பொது மக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும்.*

*இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.*




TIDEL NEO

TIDCO

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை



மினி டைடல் பூங்காக்கள்

அடிக்கல் நாட்டு விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மதிப்பீடு: ரூ.119.06 கோடி

வேலைவாய்ப்பு : 1,800 பேர்

பரப்பளவு : 1,85,000 சதுர அடி



கரூர் மினி டைடல் பூங்கா



நாகப்பட்டினம் மினி டைடல் பூங்கா



புதுக்கோட்டை மினி டைடல் பூங்கா

செ.ம.தொ.இ / 297 / வரைகலை / 2026

நாள்: 11.3.2026, புதன்கிழமை, பிற்பகல் 12.30 மணி, இடம்: தலைமைச் செயலகம், சென்னை

சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
டிட்கோ மற்றும் டைடல் நிறுவனம்

வி.அருண்ராய், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009